ஓம் ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம

**5. இப்போது நடைபெறும் நிர்வாகத்தை முழுமையாக ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளையின் கீழ் கொண்டு வந்து செயல்பட ஆசி அறிவுரை வேண்டுகிறோம்.**

**ஓங்காரக்குடிலாசான் தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிகர் அருட்சுவடி**
**23.05.2024**

1. ஓங்கார ஞான சொரூபமாய்
ஓங்காரக் குடில் படைத்து உலகோர்க்கு
ஓங்காரன் ஆசிபட அரங்கன் யான்
உயர் தொண்டர்கட்கு இதுகாலம் கேட்கும் வினாவிற்கு

2. வினாவிற்கு அருட்சுவடி வழி ஆசி விளக்கமாக
விளம்பிடுவேன் ஓங்காரக்குடிலின் நிர்வாகம் குறித்து
நிர்வாகம் எந்தன் சூட்சும சக்தியால்தான் இயங்கி வருகின்றதப்பா
நிலவுலகில் என் அன்பர்கள் வேண்டுகின்ற வண்ணம்

3. அச்சமற ஓங்காரக்குடிலின் நிர்வாகத்தை
ஆற்றல்பட அகத்தியர் சன்மார்க்க சங்க
அறக்கட்டளையின் கீழ் நேசமுடன்
தொண்டர்கள் மனம் ஒப்ப

4. தெரிவிப்பேன் ஓங்காரக்குடிலின் தொண்டு
எந்த கணமும் தடைபடா வண்ணம்
அச்சமற நிர்வாகம் சிறக்க
ஆற்றல்பட உலகே வியக்க இந்த சேவை வளர

5. அன்பர்கள் வேண்டுகின்ற வண்ணம்
அறக்கட்டளையின் கீழ் அமைத்து செயல்படுத்தவும்
ஆசான் அரங்கன் யான்
விட்டுச் சென்ற தகவலின் படியும்

6. தர்மப்படி நியமப்படி நேமப்படியும் இதனை வழிநடத்தி உலகமெங்கும்
அரங்கன் என் நோக்கத்தை எடுத்துச் செல்லவும்
அரங்கமகா ஞானியர் என் பரிபூரண ஆசியும்
அனுமதியும் உண்டு உண்டு ஆசி விளக்கம் முற்றும் முற்றே.

—சுபம்—

செயல்படுத்தலாம் என்கிறார். அறக்கட்டளையின் கீழ் கொண்டு வந்து வழிநடத்த அதற்கு ஆசியும் அனுமதியும் உண்டு. அன்பர்களிடத்தில் இசைவும் கிட்டும் என்கிறார்.